**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 370/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 17.09.2025.**

| | |
|---|---|
| **Name : தங்கராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த ரவிச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.229/2023 u/Sec. 294(பி), 323, 324, 506(2) IPC** பதிவுசெய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**